திரு. கே. டி. கே. தங்கமணி: சர்க்காரால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளிலெல்லாம் இம்மாதிரி ஏர்-கண்டிஷன்டு ஆபரேஷன் தியேட்டர்கள் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி கேட்கிற மதிப்பிற்குரிய உறுப்பினரவர்கள் நாட்டினுடைய மொத்த வறுமையை உணர்ந்து அதை வலியுறுத்த வேண்டும். நாட்டின் மொத்த வறுமையை முதலில் போக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தற்போதுள்ள மொத்த வறுமை நிலையைக் கருத்தில் கொண்டால், எல்லா இடங்களிலும் குளிர் சாதனங்களை அமைப்பது என்பது இந்த அரசு மட்டுமல்ல, இன்னும் ஐந்து ஆண்டுகள் கழித்து வருகிற அரசாங்கத்தாலும் முடியாது.

* 4 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the electric fans in the general wards of Government General Hospital, Madras are regularly switched off between the months of September and March;

(b) if so, the reasons therefor; and

(c) the total revenue expenditure annually saved by the switching off of the fans during these six months in a year?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம்வரை பனிக்காலத்தை முன்னிட்டு மின் விசிறிகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

(உ) ரூபாய் முப்பத்தோராயிரத்து எண்ணூற்று அறுபத்தி நான்கு மட்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த பான்களை குளிர்காலத்தில் நிறுத்துகின்ற காரணத்தினால், கொசு உபத்ரவம் நோயாளிகளால் தாங்க முடியாமல் இருக்கிறது. இதை உத்தேசித்தாவது பங்கா, பான்களுக்கு 'குளிர்காலத்தில் உபயோகப்படுத்தக்கூடாது' என்கிற தடையை எடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் இருந்தே குளிர் காலத்தில் மின்சார விசிறிகள், பங்காக்கள் உபயோகிப்பதை சிக்கனப்படுத்த வேண்டுமென்று எல்லா அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

All gazetted officers will be permitted the use of electric fans throughout the year but care should be taken not to use the fans unnecessarily. In offices or institutions where fans have not been installed, charges for punka-pulling will be permitted throughout the year. என்ற ஒரு கருத்து இருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போதும் கூட குளிர் காலத்தில் தேவையில்லை என்றாலும்—கொசு மிகுதியாக இருக்கிற நேரங்களில் தேவையானால் மின்சாரத்தைப் பயன்படுத்திக்

கொள்ளலாம். மேலும் 6 மாதங்கள் என்கிறபோது அக்டோபர், மார்ச் ஆகிய இரண்டு மாதங்களுக்கும் விலக்களிக்கப்பட்டு அந்தக் காலங்களில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்தும் இருக்கிறது.

செஞ்சியிலுள்ள அரசு மருத்துவ மனை

*5 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசினர் மருத்துவ மனையில் ஒரு கண்நோய் சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: செஞ்சி மலைப் பகுதியாக இருப்பதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அதிகமாக கண் நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அப்போது கடலூர், விழுப்புரம் போன்ற பகுதிகளுக்கு அவர்கள் சிகிச்சைக்காகச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இதனை உத்தேசித்தாவது இந்த முடிவை மறுபரிசீலனை செய்து அங்கே ஒரு கண் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவத்துறையில் உள்ள சிறப்பு மிக்க ஸ்பெஷலிஸ்டுகளைப் போட்டு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினர் மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பார்த்து எந்த எந்த தாலுக்கா மருத்துவ மனைகளில் எந்த எந்தப் பிரிவு மருத்துவத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாக அறிக்கை தர இருக்கிறார்கள். அவர்களது அறிக்கையில் இந்தப் பகுதியில் கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டால் அதை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன: தலைமை மருத்துவ மனைகளில் ஸ்பெஷலிஸ்டுகள் என்பதாக—அதுவும் சிறப்புத் துறையில் தலைசிறந்த நிபுணர்களாகக் கருதப்படுகிறவர்களே இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

*6 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசாங்க மருத்துவ மனையில் ரத்த பரிசோதனை நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.